# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2017.10.02 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கம் (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா** *23.00* **தபாற் செலவு : ரூபா** *10.00*

**இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கம் (கூட்டிணைத்தல்)**

**இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

*சங்கைக்குரிய குத்புஸ் ஸமான் மாதிஹுஸ் ஸிப்தைன் அல்-அல்லாமா அஷ்ஷெய்ஹ் இமாமுல் அரூஸ் ஸெய்யித் முஹம்மத் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் வலியுல்லாஹ் அவர்களால் பல பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், மத்ரஸாக்கள், அறநிலையங்கள், முஸ்லிம் தர்காக்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் வேறு பல நிறுவனங்கள் இலங்கையில் தாபிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, பேணிவரப்பட்டு உள்ளதாதலாலும்:*

*சங்கைக்குரிய குத்புஸ் ஸமான் மாதிஹுஸ் ஸிப்தைன் அல்-அல்லாமா அஷ்ஷெய்ஹ் இமாமுல் அரூஸ் ஸெய்யித் முஹம்மத் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் வலியுல்லாஹ் அவர்களால் தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, சொல்லப்பட்ட சங்கத்தின் சொல்லப்பட்ட ஆன்மீகத் தலைவரால் விதந்துரைக்கப்பட்டு அங்கத்தவர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட நடைமுறைகள், சடங்குகள், வழக்கங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க, அதன் குறிக்கோள்களையும் அதனுடன் தொடர்புடைய அனைத்துக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இற்றைவரை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:*

*சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட வேண்டுமென விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும்:*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

சுருக்கப்பெயர்.

*__1.__ இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

2-PL 005432 - 300 (2017/09)

இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கத்தை கூட்டிணைத்தல்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கம்'' எனும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டுத்தாபனமொன்று, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தினாலும் அதற்கெதிராகவும் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கவும் படலாம் என்பதோடு, பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) இச்சட்டம், தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சங்கத்தில் தற்போது உறுப்பினர்களாகவுள்ளவர்கள் இத்தால் உருவாக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக தொடர்ந்தும் இடம்பெற வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும், இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளிட்ட சங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் பட்டியல் இதனகத்துப்பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் ஆன்மீகத் தலைவருக்கு அல்லது சங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள, சொந்தமான, அர்ப்பணிக்கப்பட்டுள்ள அல்லது தொடர்புடையதான ஏதேனுமொரு சொத்து அல்லது உரிமை எதுவும் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** பின்வருவன கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்களாக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன :-

(அ) சங்கைக்குரிய குத்புஸ் ஸமான் மாதிஹுர்ரஸூல் ஸிப்தைதன் அல்-அல்லாமா அஷ்ஷெய்ஹ் இமாமுல் அரூஸ் ஸெய்யித் முஹம்மத் மாப்பிள்ளை லெப்பை ஆலிம்

வலியுல்லாஹ் அவர்களாலும் அவரின் பின்னுரித்தாளர்களாலும் தாபிக்கப்பட்டு சங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள, சொந்தமான, அர்ப்பணிக்கப்பட்ட அல்லது தொடர்புடையதான அனைத்து பள்ளிவாசல்களையும், தக்கியாக்களையும், மத்ரஸாக்களையும், அறநிலையங்களையும், முஸ்லிம் தர்காக்களையும், சமய வழிபாட்டுத் தலங்களையும் மற்றும் வேறு நிறுவனங்களையும் நிர்வகித்தலும் மேற்பார்வை செய்தலும்;

(ஆ) இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் காட்டியபடி பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களில் நியமிக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமித்தல், நீக்குதல் மற்றும் அதிகாரம் செலுத்துதல்;

(இ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட, சொந்தமான, அர்ப்பணிக்கப்பட்ட, தொடர்புடையதான அல்லது இணைக்கப்படத்தக்கதான அனைத்து பள்ளிவாசல்களுக்கும், தக்கியாக்களுக்கும், மத்ரஸாக்களுக்கும், அறநிலையங்களுக்கும், முஸ்லிம் தர்காக்களுக்கும், சமய வழிபாட்டுத் தலங்களுக்கும் மற்றும் வேறு நிறுவனங்களுக்கும் நம்பிக்கைப்பொறுப்பாளர்களை நியமித்தல், நீக்குதல், நிர்வகித்தல் உட்பட மேற்கூறிய பள்ளிவாசல்களையும், தைக்காக்களையும் மத்ரஸாக்களையும், அறநிலையங்களையும், முஸ்லிம் தர்காக்களையும், சமய வழிபாட்டுத் தலங்களையும் மற்றும் வேறு நிறுவனங்களையும் நிர்வகித்தலும் மேற்பார்வை செய்தலும்;

(ஈ) ஆன்மீகத் தலைவருக்கு அல்லது சங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள, சொந்தமான, அர்ப்பணிக்கப்பட்ட அல்லது தொடர்புடையதான ஏதேனும் சொத்துக்கள் மற்றும் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ள உரிமைகளை அடைவதற்காக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்;

(உ) சங்கத்தின் நோக்கங்களின் மேம்பாட்டை முன்னிட்டு சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்;

(ஊ) சங்கத்தின் சமய மற்றும் ஆன்மீக சடங்குகளை நடத்துதல்;

(எ) இஸ்லாமிய நம்பிக்கையாளர்களுக்கு மத்தியில் தாபகரான ஷெய்ஹின் மத்ஹப் சார்ந்த்ததான தரீக்கத்துல் அரூஸிய்யத்தில் காதிரிய்யாஹ் சூபித்துவ போதனைகளான சுன்னத் வல் ஜமா அத் இஸ்லாமிய வாழ்க்கை முறையை ஊக்குவித்தல்;

(ஏ) மத்ஹப் சார்ந்ததான கோட்பாடுகளையும், இஸ்லாமிய கலாச்சாரத்தையும், போதனைகளையும், சூபித்துவத்தையும் பிரபல்யப்படுத்துதல்; மற்றும் சமுதாய நன்மைக்கான செயற்பாடுகளை ஊக்குவித்தல்;

(ஐ) தாபகரான ஷெய்ஹின் நூல்கள் அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்;

(ஒ) பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், மத்ரஸாக்கள், அற நிலையங்கள், முஸ்லிம் தர்காக்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் வேறு நிறுவனங்களை நிர்மாணித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்;

(ஓ) பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், மத்ரஸாக்கள், அற நிலையங்கள், முஸ்லிம் தர்காக்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் வேறு நிறுவனங்களை கட்டியெழுப்பல், திருத்தியமைத்தல் மற்றும் பராமரித்தலுக்காக நிதியங்களைத் திரட்டுதல், நன்கொடைகளைப் பெறுதல் மற்றும் பொருட்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் சமய, ஆன்மீக சடங்குகளை நடத்துதல்;

(ஔ) வறுமையை ஒழித்தல்;

(க) கல்வி மேம்பாட்டுக்காக செயலாற்றுதல்;

(ங) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை நிருவகித்தல் மற்றும் முகாமைசெய்தல்;

(ச) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் எய்துவதற்கு அவசியமான, உசிதமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

**4.** (1) இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, வட்டியற்ற வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், பேணிவருவதற்கும் மற்றும் முடிவுறுத்துவதற்கும், பிணையுடன் அல்லது பிணையின்றி பணத்தை வட்டியற்ற கடனாகப் பெறுவதற்கும், சேகரிப்பதற்கும், மானியக்கொடைகளையும், கொடைகளையும் பெறுவதற்கும் சேகரிப்பதற்கும் செலவழிப்பதற்கும், கூட்டுத்தாபனத்தினால் உரித்தாக்கிக் கொண்டுள்ள அல்லது கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப் படுகின்ற ஏதேனுமொரு காணியில் ஏதேனுமொரு கட்டடத்தை கட்டுவதற்காக அதன் நிதியை முதலீடு செய்வதற்கும், காணிகளைக் கொள்வதற்கும், கொள்வனவு செய்வதற்கும், குத்தகைக்கு விடுவதற்கும் அல்லது வாடகைக்கு விடுவதற்கும் அசையும் ஆதனங்கள் மற்றும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதனங்களில் முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் ஏதேனுமொரு அல்லது அனைத்து குறிக்கோள்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஆளணியினரை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் சேவையில் அமர்த்துவதற்கும் மற்றும் சேவையிலிருந்து நீக்குவதற்குமான அதிகாரம் உட்பட கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை எய்தும் பொருட்டு அல்லது மேம்படுத்தும்பொருட்டு அல்லது முன்னேற்றும்பொருட்டு தேவையான அல்லது உசிதமான எவ்விதமான அனைத்துச் செயல்களையும், விடயங்களையும் கருமங்களையும் செய்வதற்கும், செயலாற்றுவதற்குமான தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் வேண்டும்.

எது எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனத்தின் அதிகாரமானது, எல்லாச் சந்தர்ப்பங்களிலும், சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளுக்கு இணங்கியதாக நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஏற்புடையவாறு, சங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள, சொந்தமான, உரிமையுள்ள, அர்ப்பணிக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட அல்லது முகாமை செய்யப்படுகின்ற ஏதேனுமொரு ஆதனம் தொடர்பில் தாபகரான ஆன்மீகத் தலைவர், சங்கம் அல்லது கூட்டுத்தாபனத்திற்கு அல்லது அதன் சார்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) ஆன்மீகத் தலைவரின் பொதுவான கட்டுப்பாட்டுக்கும் வழிகாட்டலுக்கும் உட்பட்டவாறு, ஆன்மீகத் தலைவரால் நியமிக்கப்படும் எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களை உள்ளடக்கிய நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையொன்றின்மூலம் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆன்மீகத் தலைவரானவர், அத்தகைய ஆன்மீகத் தலைவராக தொடர்ந்திருக்கும் காலம்வரை கூட்டுத்தாபனத்தின் சீவியகால போஷகராயிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தினத்திலிருந்து, சங்கத்தின் தற்போதைய உத்தியோகபூர்வ ஷெய்ஹாகிய சங்கைக்குரிய அஷ்-ஷெய்ஹ் அப்தலுல் உலமா கலாநிதி தைக்கா ஷுஐப் ஆலிம், பீ. ஏ. (கௌரவ), எம்.ஏ., பீ.எச்.டீ., எம்.எப்.ஏ., ஜலாலி அவர்கள் கூட்டுத்தாபனத்தின் ஆன்மீகத் தலைவராதல் வேண்டுமென்பதோடு, சீவியகாலம் வரை பதவிவகித்தலும் வேண்டும்.

(4) ஆன்மீகத் தலைவரானவர் அவரது தற்றுணிபின்படி அவருக்குப் பின்னுரித்தாளரை பெயர்குறித்து நியமிப்பதற்கான முழுத்தத்துவத்தையும் அதிகாரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய பெயர்குறித்த நியமனமானது இவ்விதிகளுக்கமைந்ததாக இருத்தல் வேண்டும் என்பதோடு, பதவிவகிக்கின்ற ஆன்மீகத் தலைவரின் மறைவைத் தொடர்ந்து அல்லது அவரது இயலாமையைத் தொடர்ந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும். ஆன்மீகத் தலைவரானவர் அவரது முழு தற்றுணிபின்பேரில் அவரது அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளில் எதனையும் தகுந்ததெனக் கருதுகின்ற அத்தகைய ஆள் எவருக்கும் அவரால் குறித்துரைக்கப்படுகின்ற அத்தகைய தொரு காலத்திற்கு கையளிக்கலாம். அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனுமொரு அதிகாரத்துக்கும் செயற்பாடுகளுக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படாதவாறு கையளிக்கப்பட்ட அத்தகைய அதிகாரங்களையோ செயற்பாடுகளையோ ஆன்மீகத் தலைவரானவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவரும்கூட நடைமுறைப்படுத்திக்கொள்ளும் தத்துவத்தை அல்லது அத்தகைய அதிகாரங்களும் செயற்பாடுகளும் கையளிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அறிவிக்காமல் இரத்துச் செய்துவிடும் தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஆன்மீகத் தலைவரின் பின்னுரித்தாளிகள் பின்வரும் இறங்குவரிசைப்படி:-

(i) சங்கைக்குரிய அஷ்-ஷெய்ஹ் அப்ஸலுல் உலமா அஹ்மத் நாஸிர் தைக்கா ஷுஜப் என அழைக்கப்படும் தைக்கா நாஸிர் ஆலிம் ஜலாலி, பீ.ஏ. (வரலாறு), எம்.எப்.ஏ., பாஸில் ஜமாலி அவர்களும் அவருக்குப் பின்னர்:

(ii) சங்கைக்குரிய அஷ்-ஷெய்ஹ் யாஸீன் முஜீருதீன் என அழைக்கப்படும் தைக்கா முஜீருதீன் ஆலிம் ஜலாலி, பீ.ஏ. (வியாபாரக் கற்கை), ஐ.இரா., அல்-அஸ்ஹரி அவர்களும் அவருக்குப் பின்னர்:

(iii) சங்கைக்குரிய அஷ்-ஷெய்ஹ் யாஸீன் முஜீருதீன் என அழைக்கப்படும் தைக்கா முஜீருதீன் ஆலிம் ஜலாலி, பீ.ஏ. (வியாபாரக் கற்கை), ஐ.இரா., அல்-அஸ்ஹரி அவர்களால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய ஆளும் ஆதல் வேண்டும்.

(6) ஆன்மீகத் தலைவரானவர் கூட்டுத்தாபனத்திற்கு ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையையும், இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையையும் நியமித்தல் சட்டரீதியானதாதல் வேண்டும் என்பதோடு, அத்தகைய ஆட்கள் ஆன்மீகத் தலைவர் விரும்பிய காலம் வரை பதவி வகித்தலும் வேண்டும்.

எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் மற்றும் இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினதும் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் ஆன்மீகத் தலைவரால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய ஆட்கள் ஆன்மீகத் தலைவர் விரும்பிய காலம் வரை பதவி வகித்தலும் வேண்டும்.

(7) ஏற்புடையவாறு, எந்தவொரு பள்ளிவாசலின், தக்கியாவின், மத்ரஸாவின், அற நிலையத்தின், சமய வழிபாட்டுத் தலத்தின் அல்லது வேறு ஒரு நிறுவனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையோ அல்லது முகாமைத்துவ சபையோ இக்கூட்டுத்தாபனத்தோடு இணைவதற்காக கூட்டுத்தாபனத்துக்கு விண்ணப்பிக்கலாம். ஆன்மீகத் தலைவரால் அத்தகைய விண்ணம் அவரது தற்றுணுபின் படி அனுமதிக்கப்படலாம். அத்தகைய விண்ணப்பம் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில், ஏற்புடையவாறு, இச்சட்டத்திற்கான ஏற்பாடுகள் அத்தகைய பள்ளிவாசல், தக்கியா, மத்ரஸா, அறநிலையம், சமய வழிபாட்டுத்தலம் அல்லது வேறு எந்தவொரு நிறுவனத்தின் மீதும் செயற்படுத்தப்பட ஏற்புடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) இச்சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கான விதிகளை ஆக்குவதற்குள்ள பொதுத் தத்துவங்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாதவாறு, பின்வரும் விதிகளை ஆக்குதல் ஆன்மீகத் தலைவருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினராவதற்கான தகைமைகளைத் தீர்மானித்தல், உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுகின்ற விதம், அவர்களது வாபஸ் பெறுதல், அவர்களை அகற்றுதல், பதவி விலகல் மற்றும் அங்கத்தவர்கள் செலுத்த வேண்டிய கட்டணம் ;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை அங்கத்தவர்களை நியமித்தல், அவர்களது பதவி விலகல் அல்லது பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து நீக்குதல் மற்றும் அவர்களது தத்துவங்கள், கடமைகள் மற்றும் நடத்தை,

(இ) பல்வேறு அலுவலர்களது, முகவர்களது மற்றும் ஊழியர்களது நியமனம், தத்துவங்கள், கடமைகள், பணிகள், நடத்தை மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு;

(ஈ) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் கூட்டத்தை நடத்துதல் தொடர்பில் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் மற்றும் அறிவித்தல்கள் அத்தகைய கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல், கூட்டத்தின் குறைந்தபட்ச கூட்ட நடப்பெண் மற்றும் அத்தகைய கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளோடு தொடர்புடைய அனைத்து கருமங்களும்;

(உ) ஆதனங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்;

(ஊ) பொதுவாக சமய, ஆன்மீக, உலகாயுத அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதன் குறிக்கோள் களை நிறைவேற்றுதல்; மற்றும்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு தேவையானதென ஆன்மீகத் தலைவரால் கருதப்படக் கூடியதான அத்தகைய ஏனைய விடயங்கள்.

(2) இந்த பிரிவின் (1)வது உப பிரிவின்கீழ் எவ்வாறு விதிகள் ஆக்கப்பட்டனவோ, அதேமுறையில் விதிகள் எதுவும் திருத்தப் படலாம், மாற்றப்படலாம், வேறுபடுத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இரண்டாவது அட்டவணையிலுள்ள சங்கத்தின் விதிகள், இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து தொடர்ந்து அமுலாகு வதுடன் அவை கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படவும் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் காலத்திற்குக்காலம் ஆக்கப்படும் விதிகளுக்கும் இச்சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் நன்கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், அன்பளிப்புகள், தானங்கள், சந்தாப் பணங்கள், பங்களிப்புத் தொகைகள், கட்டணங்கள் அல்லது அளிப்புக்கள் என்றவாறாகக் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் கிடைக்கப்பெறும் எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் கணக்கில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் இச்சட்டத்தின்கீழ் செயற்படுத்தும் பொருட்டும் கடமையாற்றும் பொருட்டும் நிறைவேற்றும் பொருட்டும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட எந்தவொரு செலவையும் செலுத்தித் தீர்ப்பதற்காக எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படவேண்டிய மற்றும் அதற்கு வருமதியாகவுள்ள கடன்கள்.*

**8**. (1) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் சந்தர்ப்பத்தில் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தில் எல்லாக் கடன்களும் கடன் அடைக்கும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தித் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதோடு, கூட்டுத்தாபனத்திற்கு வரவேண்டியதான எல்லாக் கடன்களும் செலுத்தப்படவுள்ளதான சந்தாப் பணங்கள் மற்றும் பங்களிப்புத் தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் சந்தர்ப்பத்தில் சங்கத்திற்குள்ள எல்லா உரிமைகளும், கடன் பொறுப்புக்களும் தேவையான திருத்தங்களுடன்கூடியதாக கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசையும் மற்றும் அசையா ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**9**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாசனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஆதனம் எதனையும் வைத்திருக்க கூட்டுத்தாபனம் உரித்துடையதாதல் வேண்டுமென்பதோடு அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களின்பொருட்டு கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படு

தலும் வேண்டும். மேலும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய அத்தகைய ஆதனங்களை விற்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க வுள்ள முழுத் தத்துவத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும். எவ்வாறாயினும், எந்தவொரு ஆதனத்தையும் கையாளுவதில் கூட்டுத்தாபனத்திற்குள்ள அதிகாரமானது ஷரீஅத் கோட்பாடுகளுக்கு இணங்குகின்றவாறு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, ஆன்மீகத் தலைவரால் அல்லது ஆன்மீகத் தலைவரால் அதற்காக உரியவாறு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஓர் ஆளினால் பொறிக்கப்படலாம்.

*நடைமுறையில் உள்ள வழக்கு விசாரணைகள்.*

**11.** சங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட, சொந்தமான, அர்ப்பணிக்கப்பட்ட அல்லது தொடர்புடையதான ஏதேனும் வழக்கு, நடவடிக்கை அல்லது விசாரணை எதுவும் இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் கூட்டுத்தாபனத்தின் பெயரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினது உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை** [பிரிவு 2 (3)]

**நிறுவனங்களின் பட்டியல்**

1. மக்னமுஸ் சுஅதா தைக்கா,
இல. 159, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.

2. அல்-மஸ்ஜிதுல் புஹாரி தைக்கா,
இல. 25, இமாமுல் அரூஸ் மாவத்தை, மருதானை, கொழும்பு-10.

3. அரூஸிய்யத்துல் காதிரிய்யா மத்ரஸா அரபிக் கல்லூரி,
இல. 108/31, மாளிகாகந்த வீதி, கொழும்பு-10.

4. கடகல மரத்தடி தைக்கா மற்றும் தர்கா,
இல. 32, கிளிப்ரன் ஒழுங்கை, தெமட்டகொட, கொழும்பு-09.

5. ஹுசைன் வலியுல்லாஹ் தைக்கா என அழைக்கப்படும் அஷ்-ஷெய்க் அஸ்ஸெய்யிது முஹம்மது ஹுசைன் வலியுல்லாஹ் தைக்கா,
இல. 677, கொழும்பு-காலி வீதி, கிந்தோட்டை.

6. கல்வத் தக்கியா,
கொடவத்த, வக்வெல்ல வீதி, கிந்தோட்டை.

7. மஸ்ஜித் முஹியத்தீன் தக்கியா,
இல. 37, எச். கே. எட்மண்ட் மாவத்தை, மிலிதூவ, காலி.

8. மக்னம் அப்கல் ஹம்து தக்கியா,
மாத்தளை வீதி, கட்டுகொட, காலி.

9. மஸ்ஜிதுல் அரூஸிய்யா தக்காளியா,
அக்குரஸ்ஸ வீதி, நுகதுவ, காலி.

10. புஹாரி மஸ்ஜித் மற்றும் மத்ரஸா,
பூஹாரி மஸ்ஜித் மாவத்தை, கல்பொக்க, வெலிகம.

11. மஆலுல் ஹைராத் தக்கியா,
இல. 4, புனித சர்வேஷியஸ் வீதி, கொட்டுவேகொட, மாத்தறை.

12. மல்ஹருஸ் சலாஹ் தைக்கா,
இல. 49, (பழைய இல. 917), யஹ்யா மாவத்தை, மாத்தறை.

13. முஹ்யித்தீன் அரூஸிய்யா காதிரிய்யா தைக்கா,
இல. 40, வோகர் வீதி, அம்பாந்தோட்டை.

14. அரூஸ் மௌலானா மக்பரா ஸியாரம்,
ஆண்டியா கடவத்த, கம்பொல.

15. மாப்பிள்ளை ஆலிம் கல்வத்து ஜல்வத்து தைக்கா,
1 ஆம் டிவிஷன், தக்வா நகர், புல்மோட்டை.

**இரண்டாவது அட்டவணை** [*பிரிவு 6 (4)*]

**கூட்டுத்தாபனத்தின் விதிகளும் ஒழுங்குமுறைகளும்**

1. கூட்டுத்தாபனத்தின் அங்கத்துவமானது இஸ்லாமிய நன்நம்பிக் கையாளர்களான சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த அனைவருக் கும் திறந்ததாயுள்ளது;

2. வேறு விதமாக திருத்தப்பட்டாலேயன்றி, இது நாள் வரை சங்கத்துடன் தொடர்புடையதாய் இருந்த கீழ்வரும் விடயங்களோடு தொடர்புடைய விதிகள் உள்ளிட்ட, அனைத்து விதிகளும் தொடர்ந்து அவ்வாறே கூட்டுத்தாபனத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்:-

(அ) ஆன்மீக செயற்பாடுகளை நடத்துதல்;

(ஆ) ஆன்மீக மற்றும் சமய சேவைகளை வழங்க வேண்டிய ஆட்கள்;

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் எண்ணிக்கை, அவர் களது நியமனம், நீக்குதல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்;

(ஈ) அங்கத்தவர்களின் எண்ணிக்கை, அவர்களை அனுமதித் தல், அகற்றுதல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் நீக்குதல்;

(உ) ஆன்மீக தலைவரின் பின்னுரிமை;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அடிப்படை கோட்பாடுகளுடன் தொடர்பு டைய விதிகள்.

3. கூட்டுத்தாபனத்தின் அடிப்படை கோட்பாடுகள் தவிர்ந்த மேற்படி விதிகள் எதுவும் காலத்திற்குக்காலம் மாற்றப்படலாம், வேறுபடுத் தப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*